https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# கலித்தொகைப் பாடல்-62; உரையாசிரியர்களின் திணைவைப்பு முரண்

**முனைவர் தா. பேகம்**
தமிழ் விரிவுரையாளர்
அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருட்டினகிரி

*சங்க அக இலக்கியங்களில் கற்றறிந்தார் ஏத்திப்போற்றும் நூல் கலித்தொகை ஆகும். இக்கலித்தொகையுள் குறிஞ்சிக்கலியை இயற்றியவர் கபிலர். இவர் பாடிய பாடல்கள் இருபத்தியொன்பது ஆகும். இவற்றில் தலைவன் - தலைவி இருவரும் நேரடியாக உறழ்ந்து பேசும் வகையில் இரண்டு (பா.62, 64) பாடல்களைப் பாடியிருக்கிறார். இவ்விரண்டு பாடல்களில் ஒரு பாடல் (பா.62) பெருந்திணையில் அமைந்த பாடல் என்று நச்சினார்க்கினியரும் பிறரும் கூற, இதே பாடலை இளம்பூரணர், 'கைக்கிளைக்கண்' அமைந்த பாடல் என்று கூறுகிறார். அவ்வகையில், இப்பாடலின் திணையைக் குறித்தமைந்த கருத்து முரண்பாடுகள் இவ்வாறு இருக்க, உண்மையில் இப்பாடலின் சூழல், உரையாடல், உணர்ச்சி போன்ற பலவற்றையும் ஆழ்ந்து நோக்கும்போது இப்பாடல் எவ்வகைத் திணையைச் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்பதை அறுதியிட்டு ஆய்ந்து வெளிக்கொணரும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.*

*பாடல் - 62*

*ஏஎ! இஃது ஒத்தன் நாண் இலன்; தன்னொடு
மேவேம் என்பாரையும் மேவினன் கைப்பற்றும்
"மேவினும் மேவாக்கடையும் அஃது எல்லாம்
நீ அறிதி, யான் அஃது அறிகல்லேன்; பூ அமன்ற
மெல் இணர் செல்லாக் கொடி அன்னாய்! நின்னை யான்
புல் இனிது ஆகலின் புல்லினென் - எல்லா!
தமக்கு இனிது என்று வலிதின் பிறர்க்கு இன்னா
செய்வது நன்று ஆகுமோ மற்று?"
"சுடர் தொடீ! போற்றாய் களை நின் முதுக்குறைமை;
போற்றிக் கேள்!
வேட்டார்க்கு இனிது ஆயின், அல்லது நீர்க்கு இனிது என்று
உண்பவோ நீர் உண்பவர்?
செய்வது அறிகில்லேன்; யாது செய்வேன் கொலோ,
ஐ வாய் அரவின் இடைப்பட்டு நைவாரா?
மை இல் மதியின் விளங்கும் முகத்தாரை
வௌவிக் கொளலும் அறன் எனக் கண்டன்று."
"அறனும் அது கண்டற்று ஆயின், திறன் இன்றிக்
கூறும் சொல் கேளான் நலிதரும், பண்டு நாம்
வேறு அல்லம் என்பது ஒன்று உண்டால், அவனொடு
மாறு உண்டோ நெஞ்சே நமக்கு."*

### பாடலின் சூழல்

தொல்காப்பியர் கூறும் **‘ஏறிய மடல்திறம்’** எனும் நூற்பாவிற்கண் அமைந்த ‘மிக்க காமத்தின் மிடல்’ எனும் தன்மையில் பாடப்பெற்ற பெருந்திணையின்கண் அமைந்தது இப்பாடல்என்கிறார் நச்சினார்க்கினியர். தலைவனும் தலைவியும் மாறுபட உரையாடிப் பின்னர் இருவரும் கூடக்கருதும் வகையில் இப்பாடலின் பின்புலச் சூழல் அமைந்துள்ளது.

### பாடலின் பொருள்

‘ஏஎ! இவன் ஒரு நாணமில்லாதவன், கூடி இன்புறும் குறிப்பின்றி நிற்பவரையும், கூடி இன்புறும் குறிப்புடையவனாய் வலிய வந்து கைப்பற்றித் தழுவுகிறான்’ என்று தலைவி தலைவனைப் பார்த்துப் பேச, தலைவன் தலைவியை நோக்கி‘தழுவுதலையும், தழுவாது விடுதலையும் என எல்லாம் அறிந்தவள் நீ. நான் யாதொன்றும் அறியாதவன். நெருங்கின மெல்லிய கொத்துகளைக் கொண்ட பூவாத பூக்கொடி போன்றவளே! உன்னுடைய மேனியைத் தழுவுவதற்கு இனிதாய் இருந்ததனால் தழுவினேன்’ என்றான். அதனைக் கேட்ட தலைவி,‘ஏடா, தனக்கு இனிமையாக இருக்கிறது என்பதற்காக மற்றவர்க்கு இன்னாதவற்றை வலிந்து (கட்டாயம்) செய்வது இன்பத்தை நல்குமோ?’ என்றாள். உடனே தலைவன்,

‘ஒளியுடைய வளையலை அணிந்தவளே! வருந்தாதே உன்னுடைய அறிவைப் போற்றாதே, நான் கூறுவதைக் கேள். நீர் உண்போர், நீர்வேட்கையுடன் இருக்கக்கூடிய தனக்கு இனிமையாக இருக்கிறது என்று தானே நீர் உண்பர். அவ்வாறின்றி அந்நீர்க்கு இனிமையாக இருக்கும் என்றா உண்கின்றனர்? அப்படி யாரும் உண்ண மாட்டார்கள். ஐந்து வாய்களையுடைய பாம்பினது பார்வையில் அகப்பட்டு வருத்தம் மீதூர நின்றிருந்தேன், மேற்கொண்டு செய்ய வேண்டியதை அறியாமல் இருக்கும் நான் இனி என்ன செய்வேன்? என்று மனத்தினுள் நினைத்தவனாய், அவளை நோக்கி, ‘மாசற்ற முகத்தினை உடைய மகளிரை வலிந்து பற்றிப் புணர்தலும் அறத்தின்பாற்பட்டது என்று மணநூல் கூறுகிறது’ எனத் துணிந்து கூறினான். அதனைக் கேட்ட தலைவி, மணநூலில் இவ்வுயர்ந்த மணம் கூறப்பட்டு இருப்பின், உலகத்து ஒழுக்கமும் அதுவாயின், அவனும் நான் மறுத்துக் கூறிய போதும் கேளாமல் அதற்காக வருந்திச் செயலற்று நிற்பானாயின், அவனுடைய மனத்தில் முற்பிறப்பில் நானும் அவனும் வேறு வேறு அன்று எனும் எண்ணம் உண்டாகியிருக்குமானால் என்நெஞ்சே! அவனுடன் உறவாட நமக்கு மாறுபாடு ஏதேனும் உண்டோ? என்று அவனைக் கூடி இன்புறுதற்கு உடன்பட்டவளாய் பாடல் அமைந்துள்ளது.

### பெருந்திணையா?

கபிலர், பாடியுள்ள இப்பாடலில் தலைவியின் அகவையை மூன்று இடங்களில் நுட்பமாக எடுத்துரைப்பதை அடிப்படையாகக் கொண்டும்; தலைவியைத் தலைவன் தழுவ முற்படும் முறைமையினை அடிப்படையாகக் கொண்டும் நோக்கும்போது, இப்பாடல் பெருந்திணைக்குரிய பாடல் என அறிஞர்கள் சுட்டுவதை ஏற்க இயலவில்லை.

### தலைவியின் அகவை

தலைவியின் அகவைக் குறிப்புகளை ஆழ்ந்து நோக்கும்போது, தலைவி இளையவள் என்பது மெய்யே எனினும் தலைவியைச் சிறுபெண் (பேதை) அன்று என்று உறுதியாக ஏற்கும் அளவில் தலைவியின் உரையாடலும் தோற்றப்பொலிவும் அமைந்துள்ளது. அதே போல், நச்சினார்க்கினியர் குறிப்பிடுவதைப் போல தலைவனை, பெருந்திணையின்கண் வரும் ‘மிக்க காமத்து மிடல்’ கொண்டவனாகக் கொள்ள இயலவில்லை. காரணம், இப்பாடலில், தலைவனும் தலைவியும் உரையாடிப் பேசும் உரையாடலே காரணம் ஆகும். பெருந்திணைக்குரிய இலக்கணமாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் ‘மிக்க காமத்து மிடலுக்கு’ உரிய இலக்கணம் இப்பாடலில் உறுதியாக இல்லை என்று நிறுவுவதற்குரிய சான்றுகள் சில உள்ளன.

### மிக்க காமத்து மிடல்

**‘மிக்க காமத்து மிடல்’** எனும் இத்தொடருக்கு நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம் யாதெனின், **‘காம மிகுதியானே எதிர்ப்பட்டுழி வலிதிற் புணர்ந்த இன்பம்’** என்று பொருள் கூறுகிறார். அதாவது, ‘காம மிகுதியால் வருத்தி வலிந்து இன்பம் நுகர்தல்’ என்பது பொருள் ஆகும். உண்மையில், ‘மிடல்’ என்பதற்கு ‘வலிமை – பேராற்றல் - துணிவு’ என்பது பொருள் ஆகும். ‘வலிமை / துணிவு’ என்பது வேறு; ‘வலிந்து’ என்பது வேறு. உரையாசிரியர்கள் பலரும், ‘மிடல்’ என்பதற்கு ‘வலிந்து (கட்டாயப்படுத்தி) இன்பம் நுகர்தல்’ என்றே பொதுவாகப் பொருளுரைப்பதைக் காண முடிகிறது.

தொல்காப்பியர் சுட்டும் 'மிடல்' என்பதற்கு, 'வலிமை' என்பதே சரியான பொருளாக இருக்கவேண்டும். காரணம், 'பெருந்திணை' என்பது அகத்திணை ஏழனுள் ஒன்று. காதல் நிகழ்வுகளை – காதல் உணர்வுகளைக் கூறுவது. 'மிக்க காமத்து மிடல்' என்பதற்கு 'வலிந்து' என நச்சினார்க்கினியர் கூறும் பொருள் இங்கு ஏற்புடையதன்று. அவர் கூறும் பொருளில் இச்சொல்லை நோக்கும்போது, 'காமுகன் ஒருவன் ஒரு பெண்ணை வம்பு செய்து / கட்டாயப்படுத்தி இன்பம் துய்ப்பது' எனப் பொருள் தருகிறது. இதுபோன்ற நிகழ்வுகள் சங்க காலத்தில் நடக்கவில்லை என்பது பொருளன்று; சங்கச் சான்றோர் இவ்வகை யான ஒழுக்கத்தை அகத்திணைக்கண் பாடியிருக்க மாட்டார் என்று நம்பிக்கைக் கொள்ளவேண்டும். அதாவது, தலைவியோ தலைவனோ பெருங்காமத்தால் யாரும் செய்யத் துணியாத துணிவுடைய செயலைச் செய்வாரேயாயின் அவர்கள், 'மிக்க காமத்து மிடல்' எனும் தொல்காப்பியர் சுட்டும் இலக்கணத்தில் அடங்குவர். அவ்வகையில், இப்பாடலின் சூழலை ஆழ்ந்துநோக்கும் போது, பெருந்திணையின்கண் அமைந்த பாடலாக இப்பாடலைக் கொள்ள இயலவில்லை.

## தலைவன் தலைவியரின் செயல்நிலை

தலைவனும் தலைவியும் ஓரிடத்தில் நின்று கொண்டிருக்கின்றனர். அப்போது, திடீரெனத் தலைவன் தலைவியைத் தழுவுகிறான். உடனே தலைவி, தலைவனைப் பார்த்து,

1.'நாணம் இல்லாதவனே, கூடி இன்புறும் குறிப்பின்றி நிற்கும் என்னை உன் வலிமை யால் ஏன் பற்றித் தழுவுகிறாய்' என்று கேட்பதாக உரையாடல் தொடங்குகிறது. இவ்வுரையாடலில் ஓரிடத்தில்கூட தலைவி, தலைவன்மீது சினம் கொள்ளவில்லை; அவனோடு ஊடல் கொண்டவளாகவே உரையாடுகிறாள்.

2.இப்பாட்டுடைத் தலைவியைத் தலைவன் வலிந்து அடைய முயற்சி செய்திருப்பானாயின், தலைவி தலைவனிடம் உரையாடிக் கொண்டிருப்பாளா? மேலும், வலிந்து நடக்கும் நிகழ்வில் தலைவன், தலைவியிடம் 'எனக்கு உன்னைத் தழுவ விருப்பமாக இருந்தது. அதனால் உன்னைத் தழுவினேன்' என்று தழுவுவதற்கான காரணங்களை முன்வைத்து மொழிந்து கொண்டிருப்பானா?

3.தலைவன் தலைவியிடம் உரையாடும்போது பணிந்தும் அன்பு மீதுற்றுப் பேசும் வகையி லேயும் உரையாடல் இடம்பெற்றிருக்கிறது என்பது குறிக்கத்தக்கது. தலைவன் தலைவியை வலிந்து கூடி இன்பம் துய்த்திட முற்பட்டிருந்தால் அவன் தலைவியிடம் தன் உள்ளக்கிடக்கையை, இயலாமைத் தன்மை யைப் புரியவைக்க முயற்சி செய்வானா? – என்பன போன்ற வினாக்கள் எழுகின்றன. அனைத்திற்கும் மேலாக, இவ்வுரையாடலின் முடிவில் தலைவி, தலைவனோடு கூடி இன்புற உடன்படுகிறாள். எனில், எவ்வாறு இப்பாடல் பெருந்திணையாக இருக்க இயலும். அதனால் இப்பாடல் உறுதியாக பெருந்திணையில் அமைந்த பாடலாக இருக்க வாய்ப்பில்லை.

## கைக்கிளையா?

தலைவி, தொடக்கத்தில் ஊடல் கொண்ட வளாகவும்; அதன் பின்னர் சிறிதுசிறிதாக அவ்வூடலைக் குறைத்துக்கொண்டு இறுதியில் தலைவனோடு மனமொத்துக் கூடி மகிழ்ந்திட முற்படுபவளாகவும் விளங்குகி றாள். அதனால் இப்பாடலை இளம்பூரணர் கூறுவதைப்போல கைக்கிளைப் பாடலா கவும் ஏற்க இயலவில்லை.

## அன்பின் ஐந்திணையா?

தலைவன் – தலைவி இவ்விருவருடைய உரையாடலையும் ஆழ்ந்து நோக்கும்போது, இருவரும் காதலர்கள் என்பதை அறிய இயல்கிறது. ஏதோ காரணத்தால் இருவருக்கு ள்ளும் ஊடல் நிகழ, அவ்ஊடலின் தாக்கம் சற்று குறைந்த நிலையில் சந்திப்பு நிகழ்ந்திருக்கிறது. அச்சந்திப்பில் தலைவன் தலைவியின் ஊடலுக்கு முற்றுப்புள்ளி வைக்க நினைத்திருக்கிறான். அதனாலேயே, தலைவியைப் பேச விடாமல் திடீரெனத் தலைவன் தலைவியைத் தழுவுகிறான். எனினும், பொய்யாகக் கோபம் கொண்டு தலைவி ஊடல் கொண்டவளாகவே பேச, ஒரு கட்டத்தில் தலைவன் அறநூல்கள் கூறுவதாக ஒரு செய்தியைத் தலைவியிடம் கூறி, தலைவியைத் தன் வயமாக்குகிறான். இவ்விருவருடைய உரையாடலை நோக்கும் போது, காதலர்களாக இல்லாதவர்கள் இங்ஙனம் நயமுடன் நீண்ட நெடிய நேரம் உரையாடிக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பதும் அறிய வருகிறது. அவ்வகையில், இப்பாடலின் சூழல், உரையாடல் போன்ற வற்றைநோக்கும்போது உறுதியாக இப்பாடல் பெருந்திணையோ, கைக்கிளையோ இல்லை.

*அன்பின் ஐந்திணையின்கண் அமைந்த குறிஞ்சித்திணைப் பாடலே எனக் கருதத் தோன்றுகிறது.*

*வடநூலோர் கூறும் 'இராக்கத' மணத்தை இப்பாடலுக்குப் பொருத்திக் கூறுவது பொருத்தமாகாது. காரணம், இப்பாட்டு டைத் தலைவன், தலைவி, புலவன் மூவரும் தமிழ் மண்ணில் பிறந்தவர்கள். இம்மண்ணிற் குரிய பண்பாட்டையும், அறத்தையும் மட்டுமே இவர்கள் மீது ஏற்றி ஆராய வேண்டும். பிற நாட்டவரின் அறத்தை இம்மண்ணில் பிறந்தவர்கள் மீது திணிப்பது மெய்ப்பொருளை அறியவிடாமல் தடுத்து விடும். ஈண்டு, இப்பாடலில் தலைவன் "அறநூல்கள் கூறிய நெறியிலேயே தழுவினேன்" என்று தலைவியிடம் கூறுவதை ஆழ்ந்து நோக்கும்போது, இராக்கத நிலையில் 'வலுக்கட்டாயமாகத் தழுவினான்' என்பது பொருளன்று; காதலர்களுக்கிடையே ஊடல் நிகழ்ந்த நிலையில், அவ்வூடலைத் தீர்க்கும் பொருட்டு காதலன் ஒருவன் தன் காதலியை அன்பின் மிகுதியால் வலிந்து தழுவினான் என்றே பொருளாகக்கொள்ள இயல்கிறது.*

*மூதறிஞர் வ.சுப.மாணிக்கம் அவர்கள் இப்பாடலில் சுட்டப்பெறும் 'அறநூல்கள் கூறிய நெறியிலேயே தழுவினேன்' எனும் தலைவனின் கூற்றிற்கு பொருளுரைக்கும் போது, பொதுவாக,* ***'அன்புடைய காதற் பெண்ணைக் கூடி இன்புறக் கருதும் தலைவன், இனிது மொழிந்து நலம் பாராட்டி மெல்லிய உணர்வூட்டி அணைத்துத் தழுவுதல் ஆண் முறை. காலம் மிக்க காதலன் அங்ஙனம் செய்யக் காத்திராது திடீரெனத் தழுவிக் கூடலும் உண்டு. இது புணர்முறையாகாது எனினும் அறத்திற்கு மாறில்லை. ஏன்? அவன் அன்பாதலின்'*** *(தமிழ்க் காதல்,ப.209) என்று கூறுகிறார். இக்கருத்து இங்கு, ஏற்கப் பொருத்தமுடையதாக உள்ளது. பொதுவாக, கபிலர் 'காதலன் ஒருவனுடைய காம உணர்வை அழுத்திக் கூற விரும்பும் இடங்களில் எல்லாம் அழுத்தமான, வலிமை யான, ஆற்றலுடைய வினைச் சொற்களைக் கையாளுவதைக் காண இயலும். இதனை,*

**'அவன் வெளவினன் முயங்கும்
மாத்திரம்'** *(கலி.பா.47)*
**'வளைமுன்கைப் பற்றி நலியத்
தெருமந்திட்டு'** *(கலி.பா.51)*
**'நரந்தம் நாறு இருங்கூந்தல் / எஞ்சாது
நனிபற்றி'** *(கலி.பா.94)*

*எனும் அடிகளின் மூலம் அறிய இயல்கிறது. இப்பாடலடிகளை ஆழ்ந்து நோக்கும்போது, வெளவினன் தலைவன் என்பதும்; முன்கைப் பற்றி தலைவன் நலித்தனன் என்பதும் ; தலைவியின் கூந்தலைத் தலைவன் நனிபற்றி இழுத்தான் என்பதும்-தலைவன் தலைவியை வலிந்து (மிக்க காமத்து மிடல்) வருத்திக் கூடி இன்புற முயற்சித்தான் என்பதைப்போலவே பொருள்கொள்ளச் செய்கிறது. இத்தகைய பொருள் இங்குப் பொருத்தமாகாது.*

*உண்மையில், இந்நிகழ்வுகள் மூன்றும் தலைவன், தலைவிமீது கொண்ட அதீத காமத்தால் களவொழுக்கத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளாகவே இடம்பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது. அங்ஙனம் இருக்க, இப்பாடலில் இடம் பெற்றுள்ள* ***'வெளவிக் கொளல்'*** *என்பது மட்டும் எங்ஙனம் பெருந்திணைக் குறிப்பாக அமைய இயலும். மேற்கூறப்பெற்ற பாடல்களில் இடம்பெற்று ள்ள தலைவனின் அதீத காம உணர்வினால் உண்டான நிகழ்வுகளைப் போலவே, இப்பாட்டுடைத் தலைவனும் தலைவியின் மீதுகொண்ட அதீத காதலால், ஊடலைத் தீர்க்கும்பொருட்டு திடீரெனத் தலைவியைத் தழுவியிருக்கிறான் என்றே கருத இடமளிக்கிறது. மேலும்,* ***'பெருந்திணையில் அமைந்தனவாகக் கலித்தொகையில் 10 பாடல்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பத்துப் பாடல்களை யும் பாடியவர் நல்லந்துவனார் ஒருவரே '*** *(தமிழ்க்காதல், ப.90) எனும் மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் அவர்களின் கருத்தும் இங்குச் சுட்டத்தக்கது. எனவே, கலித்தொகையில் நல்லந்துவனாரைத் தவிர வேறுயாரும் பெருந்திணையில் பாடல்களைப் பாட வில்லை என்பது அறியவருகிறது. எனவே, கபிலர் பாடியுள்ள இப்பாடல் பெருந் திணையோ கைக்கிளையோ இல்லை. அன்பின் ஐந்திணையின்கண் அமைந்த குறிஞ்சித்திணைப் பாடலே என்பதைத் தெளிவாக அறிய வருகிறது.*

## தொகுப்புரை

*கபிலர் பாடியுள்ள கலித்தொகைப் பா.62, பாடலின்கண் அமைந்த சூழல், உரையாடல், உணர்ச்சி போன்ற பலவற்றையும் பொருத்தி ஆழ்ந்து நோக்கும்போது, இப்பாடல் உரையாசிரியர்கள் (நச்சினார்க்கினியர், இளம் பூரணர்) கூறுவதைப்போல பெருந்திணையோ, கைக்கிளையோ இல்லை. அன்பின் ஐந்திணைக்கண் அமைந்த குறிஞ்சித்திணைப் பாடலே என்பது உறுதியாக அறியமுடிகிறது.*